### தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

# உருமு தனலெட்சுமி கல்லூரி

*(பல்கலைக்கழகத் தரமதிப்பீட்டுக் குழுவின்'A' தரச்சான்று பெற்றது)*

*காட்டூர், திருச்சிராப்பள்ளி - 620 019.*

### மாதிரித்தேர்வு - மே 2020

## இளங்கலை மூன்றாமாண்டு - ஆறாம் பருவம்

**தலைப்பு** : **திருக்குறள்** — **குறியீடு**: *16LCCLT13*

**நேரம்** : *3* **மணி** — **மதிப்பெண்**: *75*

### பகுதி - அ

**ஓரிரு சொற்களில் அனைத்திற்கும் விடை தருக** — *2 X 10 = 20*

1. திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
2. திருவள்ளுவர் 'அமிழ்தம்' என்று எதனைக் குறிப்பிடுகிறார்?
3. 'மறத்தலின் ஊங்கில்லை கேடு' - விளக்கம் தருக.
4. மோப்பக் குழையும் அனிச்சம்போல் வாடுபவர் யார்?
5. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை - எது?
6. சினத்தைச் 'சேர்ந்தாரைக் கொல்லி' என்று கூறக் காரணம் என்ன?
7. அரசின் நால்வகைத் தன்மைகள் யாவை?
8. 'அரியவற்றுள் எல்லாம் அரிது' - எது?
9. தீரா இடும்பைத் தரும் செயல்கள் எவை?
10. தலைவியைக் கண்டுத் தலைவன் எங்ஙனம் ஐயுறுகிறான்?

### பகுதி - ஆ

**இருபக்க அளவில் அனைத்திற்கும் விடைதருக.** — *5 X 5 = 25*

11. (அ). திருக்குறள் குறித்துப் பிறநாட்டு அறிஞர்களின் கருத்துக்களைக் கூறுக. **(அல்லது)**
    (ஆ). அழுக்காறு உடையவர்க்கு ஏற்படும் தீமைகளை வள்ளுவர் எங்ஙனம் விளம்புகிறார்?
12. (அ). மழையின் பெருமைகளைத் திருக்குறள் வழி விளக்குக. **(அல்லது)**
    (ஆ). கல்வியின் சிறப்புகளை விவரிக்க.
13. (அ). விருந்தோம்பலின் சிறப்புகளைச் செப்புக . **(அல்லது)**
    (ஆ). செய்ந்நன்றி அறிதலின் இன்றியமையாமையை விளக்குக.
14. (அ). ஊக்கம் உடையவர் பெறுகின்ற பயன்களைப் பட்டியலிடுக. **(அல்லது)**
    (ஆ). இறைமாட்சி அதிகாரக் கருத்துக்களைக் கூறுக.
15. (அ). அலரால் ஏற்படும் துன்பங்களை வள்ளுவர் வழி விளக்குக. **(அல்லது)**
    (ஆ). காதலியின் அழகை வள்ளுவம் எங்ஙனம் நலம்புனைந்துரைக்கிறது?

### பகுதி - இ

**எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக.** — *10 X 3=30*

16. திருக்குறள் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.
17. இல்வாழ்வானின் கடமைகளையும் வாழ்க்கைத் துணைநலச் சிறப்புகளையும் தொகுத்துரைக்க.
18. கூடாவொழுக்கக் கேடுகளையும் தவமுடையவர்களின் பெருமைகளையும் பட்டியலிட்டு விவரிக்க.
19. அறத்தின் தேவையை வற்புறுத்தும் திருக்குறள் கருத்துக்களை விவரிக்க.
20. தலைவனைத் துன்புறுத்தும் தலைவியின் அழகு நிலைகளைத் 'தகையணங்குறுத்தல்' அதிகாரம் வழி விளக்குக.

**தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)**

# உருமு தனலெட்சுமி கல்லூரி

*(பல்கலைக்கழகத் தரமதிப்பீட்டுக் குழுவின்'A' தரச்சான்று பெற்றது)*

*காட்டூர், திருச்சிராப்பள்ளி - 620 019.*

*மாதிரித்தேர்வு - மே 2020*

## இளங்கலை மூன்றாமாண்டு - ஆறாம் பருவம்

**தலைப்பு** : **திருக்குறள்** **குறியீடு**: *16LCCLT13*

**நேரம்** : *3* **மணி** **மதிப்பெண்**: *75*

**பகுதி - அ**

**ஓரிரு சொற்களில் அனைத்திற்கும் விடை தருக** *2 X 10 = 20*

1. திருக்குறள் மொழிபெயர்க்கப்பெற்ற உலக மொழிகளைக் கூறுக.
2. மழை பொய்ப்பின் நெடுங்கடலிற்கும் வானோர்க்கும் நிகழ்வது என்ன?
3. இல்வாழ்வான் யாருக்கெல்லாம் துணை என்று திருக்குறள் செப்புகிறது?
4. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனின் நிலை யாது?
5. மழலைச்சொல் கேளாதவர்கள் யாவர்?
6. 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்' - குறளின் பொருள் என்ன?
7. 'பேராண்மை' எனப்படுவது யாது?
8. சான்றோர்க்குப் பொய்யா விளக்கு எது?
9. 'கூகையைக் காக்கை பகலில் வெல்லும்' - இவ்வுவமை கூறும் கருத்தைக் கூறுக.
10. மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழங்களாகத் திருக்குறள் உரைப்பது என்ன?

**பகுதி - ஆ**

**இருபக்க அளவில் அனைத்திற்கும் விடைதருக.** *5 X 5 = 25*

11. (அ). திருக்குறள் மொழிபெயர்ப்புகள் பற்றி விளக்குக. **(அல்லது)**
    (ஆ). அறத்தின் சிறப்பை வலியுறுத்திக் கூறும் திருக்குறள் கருத்துக்களைக் கூறுக.
12. (அ). இனியவை கூறலின் பயன்களைப் பட்டியலிடுக. **(அல்லது)**
    (ஆ). புறங்கூறுவோரின் இயல்புகளை வள்ளுவம் எங்ஙனம் பழிக்கிறது?
13. (அ). 'கற்றலின் கேட்டல் நன்று' என்பதைக் கேள்வி அதிகாரம் வழி நிறுவுக. **(அல்லது)**
    (ஆ). 'புகழ்' குறித்துத் திருக்குறள் கூறும் செய்திகளைச் செப்புக.
14. (அ). கூடாவொழுக்கத்தால் வரும் கேடுகளாக வள்ளுவர் உரைப்பன யாவை? **(அல்லது)**
    (ஆ). 'ஊழ்' குறித்து வள்ளுவர் வாய்மொழியினை விவரிக்க.
15. (அ). தலைவியின் காதல் நிலைகளைக் 'குறிப்பறிதல்' கொண்டு நிறுவுக. **(அல்லது)**
    (ஆ). மாலைப்பொழுது கண்டு வருந்தும் தலைவியின் துயர்நிலைகளைக் காமத்துப் பால்வழிப் புலப்படுத்துக.

**பகுதி - இ**

**எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக.** *10 X 3=30*

16. திருக்குறளின் நூலமைப்பு, அதிகாரப் பகுப்பு முறை, உயர்வு மற்றும் சிறப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.
17. ஒழுக்கமுடையவராகவும் பிறனில் விழையாதவராகவும் இருக்கத் திருக்குறள் இயம்பும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
18. ஈகையின் சிறப்புகளையும் அருளுடைமையாளர் அடையும் பயன்களையும் விவரிக்க.
19. கொல்லாமை, புலால் மறுத்தல் அதிகாரக் கருத்துக்களை அடுக்கி மொழிக.
20. திருக்குறள் கூறும் தலைவியின் அழகை வருணிக்கும் 'நலம் புனைந்துரைத்தல்' கருத்துக்களை நவில்க.

**தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)**

# உருமு தனலெட்சுமி கல்லூரி

*(பல்கலைக்கழகத் தரமதிப்பீட்டுக் குழுவின்'A' தரச்சான்று பெற்றது)*

**காட்டூர், திருச்சிராப்பள்ளி - 620 019.**

**மாதிரித்தேர்வு - மே 2020**

## இளங்கலை மூன்றாமாண்டு - ஆறாம் பருவம்

**தலைப்பு** : **திருக்குறள்** குறியீடு: **16LCCLT13**

**நேரம்** : **3 மணி** மதிப்பெண்: 75

### பகுதி - அ

**ஓரிரு சொற்களில் அனைத்திற்கும் விடை தருக** 2 X 10 = 20

1. திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்திய மொழிகளைக் குறிப்பிடுக.
2. 'அழுக்காறு உடையார்க்கு அதுசாலும்' - குறளின் பொருளைக் கூறுக.
3. கேடில் விழுச்செல்வம் எது?
4. அரசருள் ஏறு போன்றவர் யார்?
5. வாய்மை எனப்படுவது யாது?
6. எண்ணித் துணிக கருமம் - விளக்குக.
7. காலம் கருதி இருப்பவரின் செயல் என்ன?
8. 'வெள்ளத்தனைய மலர் நீட்டம்' - குறள் கூறும் செய்தியைக் குறிப்பிடுக.
9. தலைவியின் இருநோக்குகள் என்ன செய்யும்?
10. தலைவன் இல்லாதபோது வரும் மாலைப்பொழுது தலைவிக்கு எங்ஙனம் அமைகிறது?

### பகுதி - ஆ

**இருபக்க அளவில் அனைத்திற்கும் விடைதருக.** 5 X 5 = 25

11. (அ). திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் பற்றிக் குறிப்பிடுக. **(அல்லது)**
    (ஆ). மக்கட்பேறின் மகத்துவத்தை விவரிக்க.
12. (அ). செய்ந்நன்றி அறிதலின் சிறப்புகளைச் செப்புக. **(அல்லது)**
    (ஆ). ஈகையின் சிறப்புகளை எடுத்தியம்புக.
13. (அ). கல்லாமையின் கேடுகளைக் குறள்வழிக் குறிப்பிடுக. . **(அல்லது)**
    (ஆ). புறங்கூறாமையின் பயன்களைப் பகர்க.
14. (அ). அன்புடைமையின் இன்றியமையாமையை வள்ளுவர் வழி விளக்குக. **(அல்லது)**
    (ஆ). காலமறிதலின் அவசியத்தைக் குறட்பாக்கள் கொண்டு நிறுவுக.
15. (அ). 'காதல் சிறப்புரைத்தல்' அதிகாரக் கருத்துக்களை விளம்புக. **(அல்லது)**
    (ஆ). காதலனை நினைத்துச் சொல்லும் 'நினைந்தவர் புலம்பல்' அதிகாரத்தில் தலைவியின் நிலைகளை எடுத்தியம்புக.

### பகுதி - இ

**எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக.** 10 X 3=30

16. திருக்குறளின் பல்வேறு சிறப்புகளை இலக்கிய மற்றும் சமூக வரலாறுகளைக் கொண்டு நிறுவுக.
17. நீத்தார் பெருமை மற்றும் தவத்தின் பெருமைகளைத் திருக்குறள் வழிப் பகர்க.
18. கல்வியின் பயன்களையும் கேள்வியின் சிறப்புகளையும் தொகுத்துரைக்க.
19. பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருப்பவர் பெறும் நலன்கள் குறித்து வள்ளுவர் வழி விளக்குக.
20. பிரிவாற்றாமையின் கொடுமையினை வள்ளுவம் எங்ஙனம் கட்டமைக்கிறது?